**பாடம் 8**

# தசமபாகத்தின் தாக்கம்



## மனன வசனம்

**ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்கு உரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்தில் உள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்று கர்த்தரும் கட்டளை இட்டிருக்கிறார். 1கொரி 9:13,14.**

## ஆராய்ச்சிக்கு

**மாற்கு 16:15; 1பேதுரு 3:8,9; 1கொரி 9:14; ரோமர் 3:19-24.**

பெப்ரவரி 17 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

விசுவாசத்தின் மிகமுக்கிய வெளிப்பாடாக தசமபாகம் இருக்கிறதெனச் சென்ற வாரம் படித்தோம். விசுவாசத்தைச் சோதிப்பதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கான பரீட்சை இது. ‘நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லலாதவர்களாயிருந்தால் அறியீர்கள்.’ 2கொரிந்தியர் 13:5.

மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுத்ததுதான் தசமபாகம்குறித்த முதல் வேதாகம குறிப்பு. ஆதி 14:18-20; எபி 7:4. லேவியர்களும் தங்களுடைய தேவாலய ஊழியத்திற்காக தசமபாகத்தை எடுத்தார்கள். 2நாளா 31:4-10. இன்று தசமபாகமானது, நற்செய்தியை அறிவிக்கப் பயன்படுகிறது. உண்மையில் தேவனோடுள்ள நம் உறவை அளக்கிற ஆவிக்குரிய அளவுகோலாக தசமபாகம் இருக்கிறது.

தசமபாகத்தின் தாக்கமும் பயன்பாடும் முக்கியத்துவமும் அதைப் பகிர்ந்தளிக்கும் முறைகளும் தேவனுடைய பணியைச் செய்வதில் நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவும்; நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்கு தேவையான நிதி ஆதாரத்தை வழங்கும். இது தேவனுடைய திட்டம்; ஓர் உக்கிராணக்காரன் எடுத்துவைக்கவேண்டிய முதல் அடியாக இது இருக்கிறது.

இந்த வாரமும் தசமபாகம்பற்றிப் பார்ப்போம். தசமபாகம் பகிர்ந்தளிக்கப்படும் விதத்தையும், பிறருக்கு அதனால் உண்டாகும் பயனையும், நம் ஆவிக்குரிய வாழ்வில் அது உண்டாக்குகிற தாக்கத்தையும் ஆராய்வோம்.

2017, பெப்ரவரி 24 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## ஒன்றுசேர்ந்து ஊழியப்பணிக்கு நிதிதருகிறோம்

'சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்' என்றும், 'சீஷராக்கி, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்' என்றும் இயேசு கட்டளையிட்டிருக்கிறார். மாற்கு 16:15; மத் 28:19,20. மக்களை இயேசுவிடம் கொண்டுவரும் மிகமுக்கியப் பணியில் நாம் ஈடுபடுவதை தேவன் விரும்புகிறார். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வளங்களிலிருந்து இந்த ஊழியப்பணியைத் தாங்கவேண்டும்; இதுதான் உக்கிராணக்காரனின் கடமை. மற்றவர்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்கவேண்டும் என்கிற தனிப்பட்ட பொறுப்பை இது பெரிதாக்குகிறது. ஒவ்வொரு சீடனும் உக்கிராணக்காரனும் ஊழியனும் இந்தப் பரிசுத்த பணிக்காக தசமபாகம் முழுவதையும் கொண்டுவரவேண்டும். வெற்றிகரமான ஊழியப்பணியானது நம் விசுவாச ஐக்கியத்தைப் பெலப்படுத்துவதுபோல, ஊழியப்பணிக்கு நிதியுதவிசெய்வதில் உண்மையோடிருக்கவும் நமக்கு ஒருமனப்பாடு வரவேண்டுமென ஜெபிக்கவேண்டும்.

***இந்த ஊழியப்பணியை நிறைவேற்றுவதற்கு தேவன் அங்கீகரித்திருக்கும் நிதித்திட்டம் என்ன? தசமபாகங்களையெல்லாம் என்றால் என்ன அர்த்தம்? மல் 3:10. என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி என்றால் என்ன அர்த்தம்? மல் 3:10.***

ஆபிரகாம், யாக்கோபு போன்றோரின் நாட்கள்முதலே தசமபாகம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆதி 14:20; 28:22. அதற்கு முன்னரும்கூட தசமபாகம் கொடுக்கப்பட்டிருக்கலாம். தேவனுடைய சபைக்கு நிதியுதவிசெய்கிற ஒழுங்குமுறையின் ஒரு பகுதிதான் தசமபாகம். தேவனுடைய ஊழியப்பணியை நிறைவேற்றுவதற்கான மிகப்பெரிய நிதி ஆதாரமாக, மிகநியாயமான ஏற்பாடாக இது இருக்கிறது.

தேவனுடைய ஊழியப்பணியைத் தாங்குவதற்கு பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மிகக்குறைவாகவே இன்று கொடுக்கிறார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவரும் உண்மையோடு தசமபாகத்தைக் கொடுப்பாரானால், அதன் விளைவு 'கற்பனை செய்யமுடியாததாகவும், திகைப்பூட்டுவதாகவும், நினைத்துக்கூட பார்க்கமுடியாத அளவுக்கும் இருக்கும்.' - கிறிஸ்டியன் ஸ்மித், மைக்கேல் ஓ. எமர்சன்.

தேவனுடைய ஊழியப்பணிக்கு பண உதவிசெய்கிற பிள்ளைகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இருந்து வந்திருக்கிறார்கள். இது உலகளாவிய ஒரு பணி; இதைப் புரிந்துகொண்டு, சேர்ந்து செயல்படுகிற கடமை நமக்கு இருக்கிறது. இந்த ஊழியப்பணிக்கு நிதியுதவி அளிப்பதில் நாம் ஒழுங்கீனமாக, கவனக்குறைவாக இருந்துவிடக்கூடாது. நெகேமியாவின் நாட்களில் லேவியர்கள், 'நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தைப் பராமரியாமல் விடுவதில்லை' என்று சொன்னார்கள். நெகே 10:39. 1800களில் சபை வளர்ச்சிக்காக விசுவாசிகள் பெரும் இன்னல்களைக் கடந்துவந்தார்கள்; இதையெல்லாம்விட பெரும் சவாலான காலத்தில் நாம் இருக்கிறோம். இன்று, உலகளாவிய திட்டங்களை நிறைவேற்றவும், ஊழியப்பணிக்கு நிதியுதவி கிடைக்கச்செய்யவும் சபை அங்கத்தினர்களும் போதகர்களும் சேர்ந்து பாடுபடவேண்டியுள்ளது.

செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளிடம் மிகப்பெரிய ஓர் ஊழியப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளி 14:6,7. இந்தப் பணிக்கு நிதியுதவி செய்வதற்கும் நம் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பை நாம் உணர்ந்துகொள்ள நாம் என்ன செய்யலாம்?

உண்மையாக தசமபாகம்கொடுப்போரை தேவன் அளவில்லாமல் ஆசீர் வதிப்பதாக மல்கியா 3:10 கூறுகிறது. ஆனாலும், இது இருபக்கம் சம்பந்தமுள்ள விஷயமாகும். உலகப்பொருட்களை ஆசீர்வாதமாக எண்ணி, மற்ற அனைத்தை யும் பலியாக்கி, அவற்றை மேலும்மேலும் சேர்த்தால், தேவனுடைய ஆசீர்வாதம் குறித்து குறுகிய ஒரு பார்வை நமக்கு இருக்கிறதென அர்த்தமாகும்.

மல்கியாவில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதமும், ஆவிக்குரிய ஆசீர்வாத மும் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. தேவன் கொடுக்கிற ஆசீர்வாதத்திற்கு இரட் சிப்பு, சந்தோஷம், சமாதானம் நிறைந்த மனது, தேவன் எப்போதுமே நமக்கு நன்மையானதையே செய்கிறார் எனும் எண்ணம் ஆகியவை சாட்சிகளாக உள்ளன. தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கும்போது, நம்மைவிட கீழ்நிலையில் உள்ளவர் களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. நம்மூலமாக தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை எல்லாருக்கும் வழங்க வல்லவராவார்.

***ஆசீர்வதிக்கப்படுவதற்கும், பிறருக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி 1பேதுரு 3:8,9இல் பேதுரு என்ன கூறுகிறார்?***

---

தசமபாகம் கொடுப்பதால் இரட்டத்தனையான ஆசீர்வாதம் கிடைக்கிறது. நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம்; பிறருக்கு ஆசீர்வாதமாக வாழ்கிறோம். நாம் பெற்றவற்றை நாம் பிறருக்கும் கொடுக்கமுடியும். தேவனுடைய ஆசீர்வாதங்கள் நமக்கு உள்ளேயும், பிறருக்கு வெளியேயும் கிடைக்கின்றன. 'கொடுங்கள்; அப் பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர் களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்.' லூக்கா 6:38.

***அப் 20:35இல் சொல்லப்படுவது, எவ்வாறு தசமபாகம் கொடுப்பதிற்கும் பொருந்தும்?***

---

தேவனை நாம் நம்ப வேண்டும் என்பதுதான் தசமபாகம் நமக்குப் போதிக்கிற மிகப்பெரிய பாடம். எரே 17:7.

'தசமபாகம் எனும் விசேஷித்த ஒழுங்கானது, தேவனுடைய நியாயப்பிர மாணம் போலவே நிலையான ஒரு நியதியை அடிப்படையாகக் கொண்டது. இந்த தசமபாகமுறை யூதர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது; இல்லையேல் தேவன் இதைக் கொடுத்திருக்கமாட்டார். இதைக் கடைப்பிடிப்பவர்களுக்கு இந்த ஆசீர்வாதம் முடிவுகாலம்மட்டும் தொடரும். ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிதியுதவித் திட்டத்தை தேவன் தமக்காக ஏற்படுத்தாமல், மனிதர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்க ஏற்படுத்தினார். இத்தகைய பயனுள்ள திட்டம்தான் மனிதனுக்கு தேவையென அவர் நினைத்திருக்கிறார்.' - *EGW, 3T, p 404,405.*

யாரோ ஒருவர் ஊழியத்திற்குச் செய்த உதவியால் தேவன் உங்களை ஆசீர்வதித்திருப்பார்; அப்படியானால், அதுபோல நீங்களும் பிறருக்கு எவ்வாறு ஆசீர்வாதமாக இருக்கலாம்?

## தசமபாகத்தின் நோக்கம்

'போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக' என்றும், 'வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்' என்றும் தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகிறார். 1தீமோ 5:18. மோசே உபா 25:4இல் சொல்லியிருப்பதையும், இயேசுவானவர் லூக் 10:7இல் சொல்லியிருப்பதையும் அவர் மேற்கோள்காட்டுகிறார். மாடுகுறித்த இந்த வாக்கியம் ஒரு நீதிமொழியாக இருக்கக்கூடும்; வேலைசெய்கிற மாடு கதிரை மேய்ந்தால் தவறில்லை என்று இதற்கு அர்த்தம். இதுபோல, நற்செய்தியை அர்ப்பணிப்போடு பிரசங்கிக்கிறவர்கள் தங்களுடைய கூலிக்கு பாத்திரவான்கள் என்பது இரண்டாவது நீதிமொழியின் அர்த்தமாகும்.

தேவன் பல ஒழுங்குகளை ஏற்படுத்தியிருக்கிறார். சூரிய மண்டலம், சுற்றுச் சூழல் அமைப்பு, உணவுமண்டலம், நரம்பு மண்டலம் என பல்வேறு ஒழுங்குகளை அவர் உருவாக்கியிருக்கிறார். ஆசரிப்புக்கூடாரப் பராமரிப்புக்கும், தங்களுடைய பிழைப்புக்கும் தசமபாகத்தை லேவியர்கள் பயன்படுத்தினார்கள். எண் 18:26. இன்று, நற்செய்தியைப் பிரசங்கிப்பதற்காக தங்களை அர்ப்பணித்திருக்கிறவர்கள் அதைப் பயன்படுத்தினால் சரியாக இருக்கும். தசமபாக ஒழுங்கானது ஊழியத்தை ஆதரிப்பதற்காக தேவன் தெரிந்துகொண்டதாகும்; இரட்சிப்பு வரலாறு முழுவதிலும் இது பயன்பட்டு வந்திருக்கிறது. எனவே, ஊழியர்களை தசமபாகம்மூலம் தாங்குவது தேவ ஊழியத்தின் அடிப்படையான ஒன்றாகும்.

***சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? 1கொரி 9:14. நாம் கடைப்பிடிக்கவேண்டிய என்ன ஒழுக்க நியதி இதில் உள்ளது? நற்செய்தியை அறிவிப்பவர்களைத் தாங்கவேண்டிய அவசியம் குறித்து 2கொரி 11:7-10 சொல்வது என்ன?***

---

---

'உங்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்கு, மற்றச் சபைகளிடத்தில் சம்பளத்தைப் பெற்று, அவர்களைக் கொள்ளையிட்டேன்' என்று பவுல் சொல்கிறார். 2கொரி 11:8. அதாவது, பணக்கார கொரிந்து சபைக்காக ஊழியம் செய்தபோது, மக்கெதோனியாவிலிருந்த ஏழை சபையிலிருந்து தான் சம்பளம்பெற்றதைக் குறிப்பிடுகிறார். நற்செய்தியைப் பிரசங்கிக்கிறவர்களுக்கு சம்பளம்வழங்கவேண்டியது அவசியமென கொரிந்து சபையாரிடம் கூறுகிறார்.

தசமபாகத்தை எப்போதுமே ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகதான் பயன்படுத்தவேண்டும். 'தசமபாகத்தை விசேஷித்த பயன்பாட்டிற்காகப் பிரித்தெடுக்க வேண்டும். வறியவர்களுக்கான நிதியாக அதைக் கருதக்கூடாது. விசேஷமாக, உலகத்தாருக்கு தேவ செய்தியை அறிவிப்பவர்களை ஆதரிக்க அதை அர்ப்பணிக்க வேண்டும்; இது தவிர வேறு நோக்கத்திற்காக இதை எடுக்கக்கூடாது.' – *EGW, CS, p 103.*

லேவி 27:30இன் நியதி எவ்விதங்களில் இன்றும் நமக்குப் பொருந்தும்?

காற்று, தண்ணீர், உறைந்த மழை, கல்மழை போன்றவற்றுக்கு தேவன் பண்டகசாலை வைத்திருக்கிறார்; அவற்றின்மேல் முழு அதிகாரமும் செலுத்துகிறார். எரே 10:13; சங் 33:7; யோபு 38:22. ஆனாலும் தசமபாகம் சம்பந்தப்பட்ட பண்டகசாலைதான் இவற்றிலெல்லாம் விலைமதிக்க முடியாதது. 'லேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாக கொடுத்தேன்.' எண் 18:21. தசமபாகம் வாங்கப்படுவதற்கான காரணத்தைத் தெரிவிக்கிற முதல் வசனம் இது; 'பண்டகசாலை ஒழுங்கு' என்று இது அழைக்கப்படுகிறது. மேலும், தாம் தெரிந்துகொண்ட இடத்திற்கு தசமபாகத்தைக் கொண்டுவரும்படி இஸ்ரவேலருக்கு தேவன் கட்டளையிட்டிருந்தார். உபா 12:5, 6. சாலொமோன் காலத்தில், எருசலேம் தேவாலயத்திற்கு தசமபாகத்தைக் கொண்டுசென்றார்கள். 'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி, தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையில் கொண்டுவாருங்கள்' என்று மல்கியா தீர்க்கதரிசி இஸ்ரவேலரிடம் சொன்னார். மல் 3:10. 'பண்டகசாலை எது, அது எங்கிருக்கிறது' என்பது அவர்களுக்கு எளிதில் புரிந்திருக்கும். ஆராதனை நடைபெற்றஇடமே பண்டகசாலை; லேவியர் ஆதரிக்கப்பட்ட இடமே பண்டகசாலை.

***பண்டகசாலைக்கு வேறு என்ன பெயர்கள் வேதாகமத்தில் சொல்லப்படுகின்றன? 1நாளா 26:20; நெகே 10:38.***

பரிசுத்த தசமபாகத்தை பண்டகசாலைக்குக் கொண்டுவருவதுதான் வேதாகமம் காட்டுகிற ஒரே மாதிரியாகும். ஒவ்வோர் அமைப்பிலும், தசமபாகத்தை நிர்வகிப்பதற்கான ஒரு மைய பண்டகசாலையை தேவன் நியமித்திருந்தார். செவந்த்-டே சபை உலகம் முழுவதிலும் உள்ளது; அச்சபை பண்டகசாலை ஒழுங்கை ஏற்றுக்கொண்டு, செயல்படுத்தி வருகிறது. விசுவாசிகள் தாங்கள் அங்கத்தினர்களாக இருக்கிற சபைகளில் தசமபாகம்கொடுக்கவும், அதை கான்ஃபரன்ஸ்/மிஷனுக்கு அனுப்பவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். கான்ஃபரன்ஸ்/மிஷன் கருவூலத்திலிருந்துதான் போதகர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

"தேவ பணி விரிவடையும்போது, உதவிக்கான வேண்டுகோள் அதிகரிக்கும். 'என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி, தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையில் கொண்டு வாருங்கள்' என்கிற கட் டளைக்கு இணங்கினால்தான் இந்த வேண்டுகோள்களை நிறைவேற்ற முடியும். கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்வோர் தங்கள் தசமபாகங்களையும் காணிக்கையையும் தேவனிடம் கொண்டுவரும்போதுதான் அவருடைய பண்டகசாலை நிரம்பும். அப்போது நற்செய்தியை அறிவிப்பதற்காக நிதிதிரட்டும்படி விற்பனை விழாக்களையும் லாட்டரிகளையும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் நடத்தவேண்டிய அவசியம் இருக்காது." - *EGW, AA, p 338.*

தசமபாகத்தை தாங்கள் விரும்பும் இடங்களுக்கு மக்கள் அனுப்ப ஆரம்பித்தால் என்னவாகும்? எல்லாரும் அப்படிச் செய்தால் தேவ பணி என்னவாகும்? தசமபாகத்தை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்பவேண்டியது ஏன் முக்கியமானது?

## தசமபாகமும் விசுவாசத்தால் இரட்சிப்பும்

***நம்முடைய விசுவாசத்திற்கு மையமான ஒரு முக்கியச் சத்தியத்தை ரோமர் 3:19-24 போதிக்கிறது. அது என்ன? இதுமட்டுமே ஏன் நம் நம்பிக்கைகளின் அடிப்படையாக இருக்கவேண்டும்?***

---

---

மீட்பைப் பெற நாம் எவருமே தகுதியில்லாதவர்கள் என்பதே வேதாகமம் சொல்கிற அடிப்படை உண்மை. ரோமர் 3:23. தகுதியுடையவர்கள் என்றால், நம் புண்ணியத்தாலோ கிரியைகளாலோ மீட்பைப் பெற்றிருக்கமுடியும்; இது வேதாகமத்திற்கு முரணான ஒரு கருத்து.

***நம் புண்ணியத்தை ஒதுக்கி, கிருபையை உயர்த்தி ரோமர் 4:1-5 சொல்வது என்ன?***

---

இரட்சிப்பானது தகுதியற்றவர்களுக்கு வழங்கப்படுகிற ஒரு பரிசு. கிறிஸ்துவின் பரிபூரண தியாகத்தால் உண்டான புண்ணியங்கள் நம் கணக்கில் எண்ணப்படுகின்றன; அதன்மூலமே இரட்சிப்பு கிடைக்கிறது. ஆனால், தசமபாகத்தை எடுத்துக்கொண்டால், அதைக் கொடுப்பதால் தேவனிடமிருந்து எந்தப் புண்ணியமும் கிடைப்பதில்லை. தசமபாகமே தேவனுக்குச் சொந்தமானது என்றால், அதை அவரிடமே கொடுப்பதால் என்ன புண்ணியத்தை எதிர்பார்க்கமுடியும்?

எந்த நற்கிரியைகளும் நம்மை இரட்சிக்கமுடியாது என்பதுபோல, தசமபாகமும் நம்மை இரட்சிக்கமுடியாது. ஆனால், நற்கிரியைகளைச் செய்யவே நாம் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டிருக்கிறோம். ‘ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி, அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.’ எபே 2:10.

ஆனாலும் தேவன் நம்மிடம் சொல்லியுள்ள தசமபாகத்தைக் கொடுப்பது தாழ்மையும் கீழ்ப்படிதலுமான மனநிலையை வெளிப்படுத்துகிறது; கொடுக்காதது பிடிவாதமும் துணிவானதுமான மனநிலையை வெளிப்படுத்துகிறது. தேவன்மேல் அன்பிருந்தால், அவருக்குக் கீழ்ப்படிவோம். இங்கு நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்; எல்லாவற்றிற்கும் நாம் தேவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்; இவற்றைச் செயலில் வெளிப்படுத்துவதே தசமபாகம் கொடுத்தல். ஓய்வுநாளானது தேவனைச் சிருஷ்டிகரென்றும் மீட்பரென்றும் வாராவாரம் நினைவுபடுத்துகிறது; அதுபோல்தான் தசமபாகமும். “நாம் நமக்குச் சொந்தமானவர்கள் அல்லர், நம் வாழ்வும் இரட்சிப்பும் தேவன் தந்த ஈவுகள்” என்பதை தசமபாகம் நினைவூட்டுகிறது. அதனால் அந்த உண்மையை உணர்ந்து, விவாசமுள்ள ஒரு வாழ்க்கையை நாம் வாழமுடிகிறது; அத்தகைய விசுவாசத்தின் உறுதியான வெளிப்பாடுதான் தசமபாகம் கொடுத்தல்.

---

விசுவாசத்தினால் வாழ்வதுபற்றி லூக்கா 21:1-4 கூறுவது என்ன?

## மேலும் படிக்க:



நம் ஒவ்வொரு மூச்சும், ஒவ்வொரு இதயத்துடிப்பும், வாழ்க்கையின் ஒவ்வொரு கன மும் ஆண்டவர் கொடுக்கிற பிச்சை; இதை எளிதில் மறந்துவிடுகிறோம். அத்தேனே பட்டணத்தாரிடம் பவுல் மெய்யான தேவனைப்பற்றிக் கூறுகிறார். அவரே சிருஷ்டிகர் என்றார். 'உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர். அப் 17:24), பிழைக்கச்செய்கிறவர் என்றார்; 'அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசை கிறோம், இருக்கிறோம்.' அப் 17:28. மெய்யான தேவனைப்பற்றி அத்தேனே பட்டணத்தாருக்குத் தெரியாது; நமக்குத் தெரியும். எனவே, இந்த உண்மை நம் வாழ்க்கையில் நேரடித் தாக்கத்தை உண்டாக்கவேண்டும். தேவனுக்கு நம்மேல் பலவகை உரிமைகள் உண்டு ; அவற்றுக்கு நாம் இடங்கொடுக்க வேண்டும்.

'தேவன் தம் பொக்கிஷங்களை மனிதரின் கரங்களில் கொடுக்கிறார்; பத்தில் ஒரு பங்கை தம் பணிக்காக உண்மையோடு பிரித்தெடுக்கச் சொல்கிறார். பிரித்தெடுத்ததை தம் பொக்கிஷசாலையில் கொடுக்கச்சொல்கிறார். அவருக்குச் சொந்தமானதை அவரிடம் கொடுக்கவேண்டும்; அது பரிசுத்தமானது; பரிசுத்த நோக்கங்களுக்காகப் பயன்படவேண்டும்; இரட்சிப்புச் செய்தியை உலகின் சகல பகுதிகளுக்கும் கொண்டு செல்வோரை அதைவைத்து ஆதரிக்கவேண்டும். இந்த நிதி எப்போதும் அவர் பொக்கிஷ அறைகளில் வந்து சேரவேண்டும்; அருகில் இருப்போருக்கும் தூரத்தில் இருப்போருக்கும் சத்தியத்தின் வெளிச்சம் கொண்டுசெல்லவேண்டும்; அதற்கு இதை நியமித்திருக்கிறார். இந்த நிபந்தனைக்கு உண்மையோடு நாம் கீழ்ப்படியும்போது, எல்லாமே தேவனுக்குச் சொந்தமானவை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.' – *EGW, 6T, p 386.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *நித்தியத்தைநோக்கி நாட்கள் வேகமாக நகர்கின்றன. தேவனுக்குச் சொந்தமானதை நாம் கொடுக்காமல் இருக்கவேண்டாம். கொடுப்பதால் புண்ணியம் இல்லை; ஆனால், மறுப்பதால் அழிவு உண்டு. கொடுக்க மறுக்காதீர்கள். முழுமனதையும் கேட்கிறார், கொடுங்கள்; சிருஷ்டிப்பாலும் மீட்பாலும் அது அவருக்குரியது. உங்கள் அறிவாற்றலைக் கேட்கிறார், கொடுங்கள்; அதுவும் அவருக்குரியது. அவர் உங்கள் பணத்தைக் கேட்கிறார், கொடுங்கள்; அதுவும் அவருக்குரியது. - EGW, AA, p 566. இங்கு எலன் ஒய்ட் சொல்வதின் அர்த்தம்புரிகிறதா? தசமபாகம் கொடுக்காமல் இருந்தால், நாம் எவ்வாறு நம்மையே களவாடுகிறோம்.*

2. *சபை அங்கத்தினர்கள் பண்டகசாலைக்கு தசமபாகத்தை அனுப்பாமல், தாங்கள் பிரயோஜனமாக எண்ணுகிற விஷயங்களுக்கு அனுப்பினால் என்னவாகும்? இது ஏன் மோசமான ஒரு செயலாகும்? இதால் நம் சபை என்னவாகும்? இது எவ்வாறு நம் மத்தியில் ஒரு பயங்கர முறிவை உண்டாக்கும்?*

3. *தேவாலயத்தில் பல்வேறு சீர்கேடுகள் நிலவின; இயேசு அதை அறிந்திருந்தாலும் தேவாலயத்தில் தசமபாகம் செலுத்தின விதவையைப் பாராட்டினார். தசமபாகம் எவ்வாறு செலவிடப்படுகிறதோ தெரியவில்லை; எனவே, நான் விரும்புகிற பணிக்குத்தான் அனுப்புவேன் என்று நினைக்கிறவர்களுக்கு இதிலுள்ள பாடம் என்ன?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: **போதகர் சாத்ராக் சாமுவேல், டாக்டர் ஏ. ஜான்சன்**

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. **YOUTUBE** க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. **YOUTUBE** க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*